**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 389/2009 |
| Deposition Of Witness for | Prosecution PW 8<br>Defense<br>Court |
| Name | திரு. ஆதிமூலம் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of February 2026.

நான் தற்போது மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் முதல்விசாரணை அதிகாரி வினோதினி உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.04.2009 ஆம் தேதி இரவு 21.00 மணிக்கு முதல்நிலை காவலர் நடராஜன் என்பவர் நிலையபொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி ஷிபா மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த உன்னாங்குளத்தை சேர்ந்த முத்துகிருஷ்ணன் மகன் சுப்பிரமணியன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையம் வந்து அதன் தன்மைகேற்ப குற்ற எண். 75/2009 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(2) என்ற வழக்கை பதிவு செய்தார். முதல் தகவலறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும்.

புகார் மனுவை அசல் தகவலறிக்கையுடன் இணைத்து கனம் நான்குநேரி நீதிமன்றம் அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், விசாரணை நகலை உதவி ஆய்வாளர் வினோதினி அவர்கள் பார்வைக்கு வைத்தார். அவர் விசாரணை நகலை

எடுத்துகொண்டு 29.04.2009 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் சாட்சிகள் முருகன், ஜெகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.7** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.8** ஆகும்.

சாட்சிகள் சுப்பிரமணியன், முத்துராஜ், முத்துகிருஷ்ணன், அன்னம்மாள், முத்தையா, கணேசன், சசி ஆகியோர்களை விசாரணை செய்து அவர்களுடைய வாக்குமூலங்களை பதிவு செய்தார். எதிரி ஓட்டிவந்த வாகனமாக TN 74 X 9286 இருசக்கர வாகனத்தை 01.06.2009ம் தேதி காலை 10.30 மணியளவில் செண்பகராமநல்லூர் டவர்பக்கம் முட்புதரிலிருந்து சாட்சிகள் முத்தையா, கணேசன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றி படிவம் 91ன் படி முறைப்படுத்தி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தார். மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ.9**, படிவம் 91 **அ.சா.ஆ.10** ஆகும். வாதி ஓட்டிவந்த TN 72 AZ 0876 வாகனம் மற்றும் எதிரியின் வாகனமான TN 74 X 9286 இருசக்கர வாகனங்களை வாகன ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றுள்ளார் பெற்றுள்ளார். மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் **அ.சா.ஆ.11** மற்றும் **அ.சா.ஆ.12** ஆகும்.

இவ்வழக்கில் காயம்பட்ட சுப்பிரமணியன் என்பவருக்கு காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவர் முகமது கனி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மருத்துவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கியுள்ளார். அவர் அளித்த காயச்சான்றிதழ் ஏற்கனவே **அ.சா.ஆ.5** ஆககுறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிக்கு ஏற்பட்ட 1வது காயம் கொடுங்காயம் என்றும், மற்ற காயங்கள் சாதாரண காயங்கள் எனவும் சான்றழிக்கப்பட்டுள்ளது.

எதிரிகளான முருகன், பாலகிருஷ்ணன் ஆகியோர் திருநெல்வேலி முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பின் வெளியே சென்றுள்ளார்.

புகார் மனுவின் அடிப்படையில் புலன் விசாரணையிலும் எதிரிகள் குற்றபுரிந்தது உண்மை என தெரியவந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 326, 506(2) மற்றும் 427 ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி பொய்யாக கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கின் மாதிரிவரைபடம், அத்தாட்சி, பார்வை மகஜர் ஆகிய ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும், சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கின் புலன்விசாரணை அதிகாரி சரியான முறையில் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கின் வாதி சுப்பிரமணியன் மற்றும் அவரது மனைவி ஏற்கனவே ஒன்றிய கவுன்சிலராக இருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதனால் வாதி காவல்நிலையத்திற்கு அடிக்கடி வருவதால் நெருக்கம் உள்ளது என்றால் இல்லை. வாதி சுப்பிரமணியன் எதிரிகளின் வாகனத்தின்மீது அவராகவே வாகனத்தின்மீது மோதி எதிரிக்கு காயம் ஏற்பட்டது என்றும், அதனை மறைத்து பொய்யாக இவ்வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதியின் செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகளின் மீது பொய்யாக இவ்வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.02.27 15:18:12 +0530